முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த

## இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**பிலவ வருடம் ஆடி மாதம் 9ம் திகதி முதல் ஆடி மாதம் 16ம் திகதி வரை**

**(25.07.2021 ஞாயிறு முதல் 01.08.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அளவற்ற மகா சக்திகொண்டநல்
   ஆறுமுகனார் திருவடி போற்றி
   வளமுற்ற இந்தியா தமிழகம் தன்னில்
   வழங்குவேன் பிலவநள்ளி திங்கள்
2. திங்களிலே நவதிகதிமேல் மூவையோர் திகதிவரை
   தேசமதின் நிகழ்வாக எதிர்கால பலன் குறித்தஆசி
   ஓங்கார ஞானி அரங்கன் கேட்க
   ஓதிடுவேன் அகத்திய மகரிஷி யானும்
3. ஞானபூமி இந்தியா தன்னில்
   ஞானிகளை வணங்கி தலைமைகள்
   ஞான ஆட்சி நடத்தி வந்தால் தான்
   நச்சுக்கிருமி அல்லல் முற்றிலும் விலகும்
4. விலகும் தமிழகத்தை விட்டும்
   விடியலே என ஞானிகளை வணங்கி
   கலகமற தயவாய் ஆட்சி நடத்தவே
   காக்கப்படும் தமிழக மண்ணும் மக்களும்
5. மக்களின் வாழ்வாதாரம் குன்றா
   மண்வளம் தொழில் வளம் குறித்த
   ஆக்கமான திட்டங்கள் பெருக்கி
   அமைதிபட நல்லாட்சி புரியவே
6. புரியவே தமிழகம் சகல வகையிலும்
   புதுமையும் வளர்ச்சியும் கண்டுயரும்
   தெரிந்தும் ஊழல் வழிமுறைகளை
   தொடர்ந்தால் எந்தவித வளர்ச்சியுமின்றி
7. இன்றியே பின்னடைவு கண்டு
   ஏற்றமான பொருளாதார பலமிலா
   குன்றும் சமூக வளர்ச்சிகளும்
   குளறுபடி ஆளுமையில் காணும்

8. காணாது உயர்மாற்றம் பெற
கந்த வேலன் வழிபாட்டுக்கு வந்து
ஞானவான்கள் திருவடிகள் பற்றி
ஞானிகள் கொள்கை ஏற்றுவர

9. வருகவே வையகம் வியக்க
வளரும் பொருளாதார வகை
தருமபலமும் சக்தியும் கூடி
தமிழகம்  வளர்ச்சி மாநிலமாகி

10. ஆகியே எந்த பிரிவினை சக்தியாலும்
ஆபத்து வாராத நல் தேசமாகி
அகிலம் போற்ற இந்தியா தமிழகம்
அனைத்து வகையும் தலைநிமிரும்
அகத்திய மகரிஷி என் வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் ஆடி மாதம் 9ம் நாள் 25.07.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஆடி மாதம் 16ம் நாள் 01.08.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

எல்லையில்லாத சக்திகளை கொண்டிட்ட ஞானமே வடிவாகிய முருகப்பெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்கியே இந்தியாவிலும் தமிழகத்திலும் பிலவ வருடம் ஆடி மாதம் 9ம் நாள் 25.07.2021 ஞாயிற்று கிழமை முதல் ஆடி 16ம் நாள் 01.08.2021 ஞாயிற்று கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கம் நிகழ்வுகள் குறித்தவற்றை ஓங்காரஞானி அரங்கமகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஞானபூமியாகிய இந்திய தமிழக தேசத்திலே தலைமைகள் ஞானிகளை வணங்கி தர்மத்தின் வழியினால் ஆகிய ஞான ஆட்சியினை நடத்திட நாட்டினில் நிலவும் நச்சுக்கிருமி அல்லல் முற்றிலும் நீங்கும் தமிழக ஆட்சியாளர்களும் ஞானிகளை வணங்கி வல்லமையுடன் மக்கள் மீது தயவாய் ஆட்சி நடத்தினால் தமிழக மண்ணும் மக்களும் காக்கப் படுவார்கள்.

தமிழக மக்களின் வாழ்வாதாரம் குறையாமல் இருப்பதற்கு அரசும் மண்வளத்தினை குறித்தும் தொழில் வளம் குறித்தும் அவை பெருகிட வேண்டியும் ஆக்கமான பல திட்டங்களை வகுத்து நல்லாட்சி புரிந்திட தமிழகம் சகல விதமான துறைகளிலும் புதுமையும் வளர்ச்சியும் கண்டு மேன்மையடையும். ஊழல் செய்வது தவறு என தெரிந்தும் தொடர்ந்து ஊழல் வழிமுறைகளை செய்து வந்தால் நாட்டினில் எவ்வித வளர்ச்சியும் இன்றி நாடு பின்னடைவை சந்திக்கும் பொருளாதார வளர்ச்சி குன்றும். பலவீனமான பொருளாதார சூழல் நாட்டில் நிலவும் ஆட்சியிலும் பலவித குளறுபடிகள் உண்டாகிடும் சமூக வளர்ச்சியும் குறையும்.

இவ்விதம் நடைபெறாமல் உயர்வான நிலையினை நாடு அடையவேண்டுமாயின் ஞானமே வடிவான ஞானபண்டிதனை முருகப்பெருமானை வழிபடும் முறைக்கு வர வேண்டும் ஞானிகளின் திருவடிகளைப் பற்றி பின்தொடர்வதுடன் ஞானிகள் வகுத்திட்ட தயவு நெறிக்

கொள்கைகளை ஏற்று கடைபிடித்து வந்திட இந்த உலகமே வியக்கும் வகையில் நாட்டின் பொருளாதாரம் வெகு வேகமாக உயரும் தருமபலமும் பெருகி தமிழகம் வளர்ச்சி மிக்க மாநிலமாக ஆகி எந்த பிரிவினை சக்தியாலும் ஆபத்து இல்லாத நல்ல தேசமாக மாறி உலகமே போற்றும் வகையில் இந்திய தேசமும் தமிழகமும் எல்லா வகையிலும் தலை நிமிர்ந்து நிற்கும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–